# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 9.00*** ***தபாற் செலவு : ரூபா 10.00***

**2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம்**

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. 19/2011*

**வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய ஆணைக்குழுவின் தத்துவங்களையும், அத்தகைய மேன்முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையையும் குறித்துரைப்பதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான தொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

*1.* இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*வரிமேன்முறை யீட்டு ஆணைக் குழுவைத் தாபித்தலும் அதன் அமைப்பும்.*

*2.* (1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என அழைக் கப்படுவதும் அறியப்படுவதுமான ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் வரியை, அறவீட்டை அல்லது தீர்வையை விதித்தல் தொடர்பான கருமங்கள் தொடர்பிலான எல்லா மேன்முறையீடுகளையும் விசாரிக்கும் பொறுப்பு அதற்குப் பொறுப்பிக்கப்படுதலும் வேண் டும்.

(2) ஆணைக்குழுவானது மூன்று உறுப்பினர்களுக்கு மேற்படா தோரைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அவர்கள், உயர்நீதிமன்றத் தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் இளைப்பாறிய நீதிபதிகள், வரிவிதித்தல் அத்துடன் நிதி மற்றும் சட்டம் என்ற துறைகளில் பரந்த அறிவுள்ளவர்களும் பிரபல்யம் பெற்றுள்ள வர்களுமான ஆட்களிலிருந்து, நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரி னால் நியமிக்கப்படுதல் வேண்டும். உறுப்பினர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

2-PL 005601 -1120 (2011/03)

(3) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

*ஆணைக்குழுச் செயலாளர்.*

**3.** ஆணைக்குழுவுக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன், அவர், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

*சட்டமதியுரைஞர்கள் குழாம்.*

**4.** (1) அமைச்சர், (இதனகத்துப்பின்னர் "குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சட்டத்துறையில் பிரபல்யம் எய்தியுள்ளவர்களான பத்துப் பேருக்கு அதிகமாகவிராதோரைக் கொண்டுள்ளதுமான சட்ட மதியுரைஞர்கள் குழாமொன்றை, இச்சட்டத்தின் கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் ஆணைக் குழுவுக்கு உதவும் நோக்கத்துக்காக நியமித்தல் வேண்டும்.

(2) குழாத்தின் மூன்று அல்லது அதற்குமேற்பட்ட உறுப்பினர்கள், ஆணைக்குழுவின் விசாரிப்புகளுக்கு வருகை தருவதற்கும், அத்தகைய ஆணைக்குழுவின் முன்னருள்ள மேன்முறையீட்டு நடவடிக்கைகளையும் புலனாய்வுகளையும் (எவையேனுமிருப்பின்) தொடர்ந்து நடாத்துவதற்கும் உதவுவதற்கும் அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

*ஆணைக்குழு உறுப்பினர்களினதும் குழாத்தினதும் கூட்டங்கள்.*

**5.** தவிசாளரின் வேண்டுகோளின்பேரில், ஆணைக்குழுச் செயலாளர், ஆணைக்குழுவினதும் குழாத்தினதும் எல்லா உறுப்பினர்களினதும் கூட்டமொன்றை ஒருமாதத்துக்கொரு தடவை கூட்டுதல் வேண்டும். அத்தகைய கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

*ஆணைக் குழுவினதும் குழாத்தினதும் உறுப்பினர்களுக்கான ஊதியம்.*

**6.** ஆணைக்குழுவினதும் குழாத்தினதும் உறுப்பினர்களுக்கு, அமைச்சரினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தொகையில் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

*அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட முடிபுக்கெதிராக ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை.*

**7.** (1) இச்சட்டத்துக்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றினதும் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் வரியை, அறவீட்டை அல்லது தீர்வையை விதித்தல் தொடர்பான ஏதேனும் கருமம் தொடர்பில் கொடுக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தினால் இன்னலுற்ற ஆளொருவர், இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம் :

ஆயின், மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கு விரும்புகின்ற ஆளொவ்வொருவரும் மேன்முறையீட்டைச் செய்யும் நேரத்தில், அத்தகைய நோக்கத்துக்காக ஆணைக்குழுவினால் திறக்கப்பட்டுத் தொழிற்படுத்தப்பட வேண்டியவொரு விசேட வரிமதிப்பீடானது மேன்முறையீட்டின் விடயமாகவுள்ளதாக, சொல்லப்பட்ட சட்டவாக்கங்களுள் எவற்றின்கீழும் வரியாக அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதென ஆணையாளர் தலைமையதிபதியினால் வரிமதிப்பிடப்பட்டவாறான அத்தகைய பணத்தொகையின் இருபத்தைந்து சதவீதத்துக்குச் சமமாகவுள்ளவொரு தொகையை அல்லது சமமான தொகைக்கான வங்கி உத்தரவாதமொன்றைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளினதும் நியதிகளின்படி மேன்முறையீடு செய்வதற்கான உரிமையொன்று எவ்வாளுக்கு ஏற்பட்டுள்ளதோ அவ்வாள் ஒருவர், தீர்மானத்துக்கெதிராக ஆணைக்குழுவுக்குத் தாம் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கு உட்கருதுகின்றார் என்ற நிகழ்வை, முறையான சட்டங்களின்கீழ் அத்தகைய தீர்மானம் அவருக்கு அறிவிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும். அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனுமிருப்பின் அவரின் பெயரும் முகவரியும் உட்பட, தீர்மானம் பற்றிய இயைபான எல்லா விபரங்களையும் அத்தகைய அறிவிப்பில் அவர் கூறுதல் வேண்டும்.

(3) இன்னலுற்ற ஆள், அத்தகைய தீர்மானத்துக்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்றைச் செய்வதற்குத் தாம் உட்கருதுகின்றாரென (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க

ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளவிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய அறிவிப்பின் பிரதியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்து, அத்தகைய ஆள் எந்தத் தீர்மானத்துக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கு நாடுகின்றாரோ அந்தத் தீர்மானத்துக்கான அவரது காரணங்களை, அறிவிப்புப் பெறப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், ஆணைக் குழுவுக்கும் இன்னலுற்ற ஆளுக்கும் அவரது அதிகாரமளிக் கப்பட்ட பிரதிநிதிக்கும் எழுத்தில் அனுப்பும்படி அவரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிப்ப தற்கான முறையும் படிவமும், அதுதொடர்பில் செலுத்தப்படற் பாலனவான கட்டணங்கள் எவையேனுமிருப்பின் அவையும், எந்தக் காலப்பகுதியினுள் மனுவொன்று செய்யப்படுதல் வேண்டுமோ அந்தக் காலப்பகுதியும் விதித்துரைக்கப்பட்டவா றாகவிருத்தல் வேண்டும்.

மேன்முறை யீட்டைச் செய்வதற்கான நடவடிக்கை முறை.

**8**. இன்னலுற்ற ஆள், ஆணையாளர் தலைமையதிபதியினால் கொடுக்கப்பட்ட காரணங்களுடன் திருப்தியடையாவிடின், அதற்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாமென்பதுடன், ஆணைக்குழுவானது, அதற்கென ஆக்கப் படக்கூடிவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க அத்தகைய மேன்முறையீட்டை விசாரித்து முடிவுசெய்தலும் வேண்டும்.

மேன்முறையீட்டை விசாரித்தல்.

**9**. (1) மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள், ஆணைக்குழுச் செயலாளர், மேன்முறை யீட்டை விசாரிப்பதற்கானவொரு தேதியையும், நேரத்தையும், இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டுமென்பதுடன், மேன்முறை யீட்டாளருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அதுபற்றி நாற்பத்திரெண்டு நாட்கால அறிவித்தலைக் கொடுத்தலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான அறிவித்தலைப் பெற்றதன்மேல் ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்துக்கான அட்டவணை யிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான சட்டவாக்கங் களின் ஏற்பாடுகளினது பிரித்தெடுத்த பகுதிகளையும் அத்தகைய சட்டவாக்கங்களின்கீழ் பேணப்பட்ட சான்று பற்றிய பதிவேட்டையும் ஆணைக்குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.

(3) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்மூலம், ஆணைக்குழுவினால் மேன்முறையீடு விசாரிக்கப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நாளன்று வருகை தருதல் வேண்டும் :

ஆயின், மேன்முறையீட்டாளரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மேன்முறையீடு விசாரிக்கப்படுகையில் சமுகமாயிருக்குமிடத்து, ஆணைக்குழுவானது, மேன்முறையீட்டாளர் நேரடியாக வருகை தருவதனை இயலச் செய்வதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிக்கு விசாரிப்பைப் பிற்போடலாம்.

(4) எந்த வரிமதிப்பீட்டுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாளர் அல்லது அதற்கென ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர், அத்தகைய மேன்முறையீடு விசாரிக்கப்படும் ஆணைக்குழுவின் விசாரிப்புக்கு, ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்துக்கு ஆதரவளிப்பதற்கென வருகைதருதல் வேண்டும்.

(5) சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்த சட்டவாக்கங்களின் நியதிகளின்படி ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்பட்டவாறு வரிமதிப்பீடு மிதமிஞ்சியது அல்லது பிழையானது என்பதனை எண்பிக்கும் பொறுப்பு மேன்முறையீட்டாளர் மீதானதாதல் வேண்டும்.

(6) எல்லா மேன்முறையீடுகளும் இரகசியமாக விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஆணைக்குழு எந்த ஆள் மேன்முறையீடு தொடர்பில் சாட்சியமளிக்கும் ஆற்றலுடையவர் எனக் கருதுகின்றாரோ அந்த எவரேனும் ஆளின் வருகையை விசாரணைக்கு அழைப்பாணை விடுக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் சத்தியத்தின்மீது அன்றேல் வேறு வகையில் அவரைப் பரிசீலனையும் செய்யலாம். அவ்வாறு வருகை தரும் எவரேனும் ஆளுக்கு அவ்வாறு வருகை தருவதில் அவரால் அவசியம் உறப்படும் எவையேனும் நியாயமானது செலுத்தப்படுவதற்கு ஆணைக்குழுவால் அனுமதிக்கப்படலாம்.

(8) ஆணைக்குழுவின் சம்மதத்துடன் ஆணைக்குழு தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மீது தவிர, மேன்முறையீட்டாளர் விசாரணையின்போது, ஆணையாளரின் முன்னிலை

யில் சமர்ப்பிக்கப்படாத ஏதேனும் ஆவணத்தைச் சமர்ப்பிப்பதற்கோ அல்லது அந்த சாட்சியின் சான்று ஆணையாளர் தலைமையதி பதியின் முன்னிலையில் எடுத்துரைக்கப்படவில்லையோ அந்த சாட்சியின் சான்றை எடுத்துரைக்கவோ அல்லது ஆணையாளர் முன்னிலையிலான விசாரணையில் எந்த சாட்சியின் சான்று ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டதோ அந்த சாட்சியின் சான்றை எடுத்துரைக்கவோ அனுமதிக்கப்படுதலாகாது.

(9) மேன்முறையீட்டின் விசாரணையின் போது ஆணைக்குழு வாய்மொழி மூலமாகவாயினும்சரி ஆவணத்தின் மூலமாக வாயினும்சரி ஏதேனும் சான்றை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம் என்பதுடன் சான்றின் ஏல்தகவு தொடர்பில் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய சான்று தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

(10) சான்றை விசாரித்ததன் பின்னர் ஆணைக்குழு ஆணையாளர் தலைமையதிபதியால் தீர்மானிக்கப்பட்டவாறு வரிமதிப்பீட்டை விடயத்திற்கேற்ப உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் அல்லது அத்தகைய மேன்முறையீட்டின்மீது ஆணைக்குழுவின் முடிவுடன் வழக்கை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் திருப்பியனுப்பலாம். வழக்கொன்று ஆணைக்குழுவால் அவ்வாறு திருப்பியனுப்பப்படுமிடத்து ஆணையாளர் தலைமையதிபதி ஆணைக் குழுவில் முடிவில் குறிப்பிடப்பட்டவாறு அத்தகைய தொகையுடன் ஒத்திசைவதற்கென வரிமதிப்பீட்டை மீளாய்வு செய்தல் வேண்டும். ஆணைக்குழுவின் முடிவு மேன்முறையீட்டாளருக்கும் ஆணையாளர் தலைமையதிபதிக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

*மேன்முறையீடுகள் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படல்.*

**10.** ஆணைக்குழு அதனால் பெறப்பட்ட எல்லா மேன்முறையீடுகளையும் விசாரித்தலும் அத்துடன் மேன்முறையீட்டின் விசாரணை தொடங்கிய தேதியிலிருந்து நூற்றி எண்பது நாட்களுக்குள் அது தொடர்பில் அதன் முடிவை எடுத்தலும் வேண்டும்:

ஆயினும், இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அந்தந்த சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அந்தந்த மீளாய்வுச் சபையின் அல்லது சபைகளின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் எல்லா மேன்முறையீடுகளும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து

ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், அத்தகைய மேன்முறையீடுகள் கைமாற்றப்பட்ட தேதியிலிருந்து நூற்றியெண்பது நாட்களினுள் அவை தொடர்பிலான அதன் முடிபைச் செய்தலும் வேண்டும்.

*ஆணைக்குழு வரிமதிப்பீட்டைக் குறைக்காவிடில் அல்லது இல்லாதொழிக் காவிடில் செலவுகள் வரிமதிப்பீட்டுடன் அறவிடப்படுதல்.*

**11.** ஆணைக்குழு 9 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த வரிமதிப்பீடு தொடர்பில் இச்சட்டத்தின் நியதிகளின்படி மேன்முறையீடொன்று செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீடொன்றை குறைக்காதவிடத்து அல்லது இல்லாதொழிக்காதவிடத்து, ஆணைக்குழு செலவுகளாக ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகையொன்றை வரிமதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக செலுத்துமாறு மேன்முறையீட்டாளருக்குக் கட்டளையிடலாம். இது வரிமதிப்பீட்டால் அறவிடப்பட்ட வரியுடன் சேர்த்து அதனுடன் மீட்டுப் பெறப்படுதல் வேண்டும்.

*வழக்கு அல்லது துடர்ச்சி எதுவும் இருத்தலாகாது.*

**12.** இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆணைக்குழுவின் பணிப்புரைகள்மீது நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யாது விடப்படும் ஏதேனும் சட்டபூர்வமான செயலுக்காக ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக வழக்கு அல்லது துடர்ச்சி எதுவுமிருத்தலாகாது.

*நீக்கங்கள்.*

**13.** இச்சட்டத்திற்கான அட்டவணையின் நிரைI இல் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள் அட்டவணையின் நிரை II இல் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய அட்டவணையின் நிரை III இல் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அளவுக்கும் அத்தகைய முறையிலும் அதன் பிரிவுகளில் அல்லது பாகங்களில் இத்தால் திருத்தப்படுகின்றன அல்லது நீக்கம் செய்யப்படுகின்றன.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரை I | நிரை II | நிரை III |
|---|---|---|
| சட்டவாக்கத்தின் பெயர் | திருத்தப் படவுள்ள பிரிவுகள் அல்லது பாகங்கள் | ஏற்புடைத்தான திருத்தம் |
| 1. 2006 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, உண்ணாட் டரசிறைச் சட்டம் | பிரிவுகள் 166, 167, 168, 169 | உண்ணாட்டரசிறைச் சட்டம் பிரிவு 166, பிரிவு 167, பிரிவு 168, பிரிவு 169 என்பவற்றை நீக்கம் செய்வதன் மூலம் இத் தால் திருத்தப்படுகின்றது. |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர் பெறுமதி வரிச்சட்டம் | பிரிவுகள் 35, 35(1அ) 36 | சேர் பெறுமதிவரிச் சட்டம், பிரிவு 35, பிரிவு 35(1அ) பிரிவு 36 என்பவற்றை நீக்கம் செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. |
| 3. 2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டி யெழுப்புதல் வரிச்சட்டம் | பிரிவு 8 | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்சட்டம் பிரிவு 8 இலிருந்து "மேன்முறையீடுகள் தொடர் பில் அத்தியாயம் xxiii" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் விட்டுவிடு வதன் மூலம் இத்தால் திருத் தப்படுகின்றது. |
| 4. 2006 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க, பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டம் | பிரிவு 11 | பொருளாதார சேவை விதிப் பனவுச்சட்டம் பிரிவு 11இலிருந்து "மேன்முறையீடுகள்" என் னும் சொல்லை விட்டு விடுவ தன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது. |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்